## தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின்-2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முதலாவது தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழா தொடர்பான பெறுவனவு மற்றும் கொடுப்பனவுக் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு லீப் ஆண்டும் முடிவடைந்ததன் பின்னர் இயலுமான அளவு விரைவாக நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கை அமைச்சு செயலாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,104,303 மிகையாக இருந்ததுடன் அதற்கு

நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,045,187 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 25,940,884 தொகையான வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டது. வருமானம் ரூபா 58,408,466 ஆல் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

இலங்கை விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துதல், அவற்றினை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிதியத்தின் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் அதற்காக கூட்டிணைந்த திட்டத்தினையும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினையும் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் விளையாட்டு நடவடிக்கைகளுக்காகச் செய்யப்படுகின்ற வேண்டுகோளின் பிரகாரம் ஏதும் பணத்தினை வழங்குவதற்கு மாத்திரம் தற்பொழுது நிதியத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகின்றது.

### 3.2 முகாமைத்து செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விமான டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதி ஊசூ சங்கத்திற்கு ரூபா 1,677,750 தொகையும் 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதி இலங்கை கரப்பாந்தட்ட சங்கத்திற்கு ரூபா 1,231,200 தொகையும் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் போது 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விமான டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெயட்ட கிருல அபிவிருத்திக் கண்காட்சிக்காக 04 விளையாட்டுச் சங்கங்களுக்கு ரூபா ஒரு மில்லியன் படி வழங்கப்பட்டிருந்தது. அப்பணத்தினை வழங்கும் போது அதற்காக செலவு மதிப்பீடு உரிய சங்கங்களிலிருந்தும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

ஆண்டு முழுவதும் ரூபா 03 மில்லியனுக்கு சமமான மீதி வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்டதுடன் அதனை விளைதிறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே 72% இலிருந்து 265% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனவே பாதீடு விளைதிறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பற்றுச்சீட்டுக்கள்

(ஆ) பாதீடு

(இ) நிதிகளின் பயன்பாடு